நடப்பாண்டில் திட்ட மதிப்பீடு திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திருத்திய மதிப்பீடு பேரூராட்சிகளுடைய இயக்குநரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிற காரணத்தாலும், பேரூராட்சிகள் இயக்குநர் அதற்கான நிதிநிலைச் சான்றுகளை கொடுக்க வேண்டியிருக்கிற காரணத்தாலும், அவரிடமிருந்து விரைவாக அந்த நிதிநிலைச் சான்றுகளைப் பெற்று, இந்தத் திட்டத்திற்கான அனைத்து ஒப்புதல்களும் வழங்கப்பட்டு, இதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்தத் திட்டத்தினுடைய பணிகள் எல்லாம் நிறைவுபெற்ற தருவாயில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஒப்புதல் தந்து, தற்போது நிதியாதாரத்திற்காக அரசிடம் ஒப்புதல் பெறுவதற்கு கோப்புகள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக செய்தி வரப் பெற்றேன். எனவே, அதன் அடிப்படையில், மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்கள் நிதியாதாரத்திற்காக தற்போது என்ன வழிவகை செய்யப்போகிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கான ஒப்புதல் வாரியத்தில் வழங்கப்பட்டு, இன்றைக்கு அரசின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். இந்தத் திட்டத்திற்கான நீராதாரம் அருங்குளம் அருகிலுள்ள கொசஸ்தலை ஆற்றில் அமைப்பதற்கான திட்டத்தை, ஆய்வுப் பணியை, இன்றைக்கு வாரியம் மேற்கொள்ள இருக்கிற காரணத்தாலும், அதிக மக்கள் தொகையை கொண்டிருக்கிற திருத்தணி நகரத்திற்கு இந்தத் திருத்திய மதிப்பீடு தேவை என்ற காரணத்தாலும், இன்றைக்கு தற்போதைய விலை பட்டியலின்படி ரூ. 273.50 இலட்சத்திற்கு திருத்தியமைக்கப் பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் திருத்திய மதிப்பீடுகளுக்கு அரசினுடைய ஒப்புதல் பெறப்பெற்றபின், இந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டு, 3 ஆண்டுக்காலத்தில் முடிக்கும்வண்ணம் திட்டமிடப் பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியுடன், வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 359. திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

359—

போளூர் குடிநீர்த் திட்டத்தை நவீனப்படுத்தல்

***21931—திரு. தா. வேடியப்பன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூரின் வளர்ச்சி பெருக்குத் திட்டமாக குடிநீர் ஆய்வுப் பணிகள் நடைபெற்றதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தை நவீனப்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். போளூர் பேரூராட்சிக்குக் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ஆய்வு செய்யப்பட்டு, திட்ட மதிப்பீடு ரூ. 65.70 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதயத் தாய் அரசு பொறுப்பேற்ற பிறகுதான், போளூர் மட்டுமல்ல, தமிழகம் முழுவதற்குமே சிறப்பான முறையில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில், பெரிய மாபெரும் நகரமான சென்னை மாநகருக்கும் சிறப்புத் திட்டங்களை எல்லாம் செய்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் எங்களுடைய போளூர் நகருக்கு, வளர்ந்து வரும் போளூர் நகருக்கு, சிறப்பான முறையில் 4 லட்சம் ரூபாய் ஒதுக்கி, ஆய்வுப் பணிகள் எல்லாம் முடிவுற்று இருக்கின்றன. அதற்காக எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டு, அரசினுடைய டெக்னிக்கல் சாங்சனுக்காக அனுப்பப்பட்டு இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டில் அதைப் பரிசீலனை செய்து—கோடைக்காலமானால் 3 நாட்களுக்கு ஒரு முறைதான் தண்ணீர் வழங்கப்படுகிறது, எனவே, இதனை ஆய்வு செய்து, இந்த ஆண்டில் குடிநீர் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழி செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் பேரூராட்சிக்காக குடிநீர் அபிவிருத்தித் திட்டம் இன்றைக்கு ஆய்வு செய்யப்பட்டு, திட்ட மதிப்பீடு 65 லட்சத்து 70 ஆயிரத்திற்கு தயாரிக்கப்பட்டு உள்ளது என்று தெரிவித்து இருந்தேன். இந்தத் திட்ட மதிப்பீட்டினுடைய அடிப்படையில், வாரியத்தின் ஒப்புதலுக்காக சம்பந்தப்பட்ட திட்டத்தை வைத்திருக்கிறார்கள். வாரியத்தினுடைய ஒப்புதல் பெறப்பட்ட பிறகு, அரசுக்கு அனுப்பி

வைக்கவேண்டும். அரசின் ஒப்புதலைப் பெறுவதற்காக உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் வாயிலாக இந்தத் திட்டம் கூடியவிரைவில் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 360, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

360—

செங்கம் நகர் கருமார தச்சுப்பட்டறையை விரிவாக்குதல்

*21370—டாக்டர் பெ. வீரபாண்டியன்:

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கம் நகரில் உள்ள கருமார தச்சுப்பட்டறையை விரிவாக்கி கைவினைத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாரியம் பரிசீலித்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் நகரம் திருவள்ளூர் நகரில் தச்சுக் கருமார்க் கூட்டுறவுச் சங்கம் ஒன்று இயங்கி வருகிறது. இந்தச் சங்கம் தொடங்கியது 1964 ஆம் ஆண்டு. திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்தில், செய்யாறு, வந்தவாசி, திருவண்ணாமலை, செங்கம் ஆகிய இந்த இடங்களில்தான் தச்சுக் கருமார்ப் பட்டறைகள் இருக்கின்றன. இந்த 4 பட்டறைகளிலே, செங்கம் தொகுதியில் உள்ளதுதான், 30 ஆண்டுக்காலமாக செயல்பட்டு வருகிறது. இந்தச் சங்கத்தில் கிட்டத்தட்ட 100 உறுப்பினர்கள் கைவினைஞர்களாக இருந்தார்கள். பல பொருட்களை உற்பத்தி செய்து விநியோகம் செய்து வந்தார்கள். ஆனால், இப்போது ஒரு கிளார்க், ஒரு வாட்ச்மேன், இவர்கள் இருவர்தான் அங்கே இருக்கிறார்கள். கிட்டத்தட்ட 100 தொழிலாளர்கள் தச்சுப் பட்டறைகளிலே வேலை செய்யும் கைவினைஞர்கள் வேலையில்லாமல் இன்று இருக்கிறார்கள். தயவுகூர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களுடைய மறுவாழ்வுக்கு ஏதாவது ஆவன செய்வார்களா என்று கேட்க விழைகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தக் கூட்டுறவுச் சங்கமானது, 1964 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது என்று குறிப்பிட்டார்கள். தவறானது. 10-7-1960 ஆம் ஆண்டே தொடங்கப்பட்டது. 133